# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.08.2024 | தீபம் 26


# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்

# ஆடிப்பிறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது

## வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்

## திருமதி லாகினி நிருபராஷ் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா 24.07.2024 காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசும் கலந்துகொண்டனர்

.இந்நிகழ்வுகளை ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி மைதிலி கோகுலக்கண்ணன் நெறிப்படுத்தினார்.

வரவேற்புரையினை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி கிட்டா தவராசாவும் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் வாழ்த்துரையையும் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்செல்வன் ஆசிரியமாணவர் உரை யையும் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆடிப்பிறப்புப் பற்றிய சிறப்புரையையும் ஆற்றினர்.

.கவின்கலைமன்றக் காப்பாளர் ரஜிதா சின்னதுரை பிரதம விருந்தினரை அறிமுகம் செய்து வைத்ததோடு தொடக்கவுரையையும் ஆற்றினார். நன்றியுரையினை கிறிஸ்தவ கல்விநெறி ஆசிரிய மாணவி கமலினி சுதாகர் ஆற்றினார். நிகழ்வின் நிறைவில் கலாசாலை சமூகத்தினர் அனைவருக்கும் ஆடிக்கூழ் பரிமாறப்பட்டது.







## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


**திருமதி சந்திரிகா நாகேந்திரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி**

# மணிவிழா வாழ்த்துகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் முனைவர் சந்திரிகா நாகேந்திரன் அவர்களின் மணிவிழா 26.7.2024 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் சரஸ்வதி கலையரங்கில் நடைபெற்றது.
இதன் போது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தின் சார்பில் அதிபர். பிரதிஅதிபர், உபஅதிபர் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு தம்பதியரை கௌரவித்ததுடன் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்






# கலாதீபம்

කලාදීප KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

எந்த ஒருநாடும் அந்நாட்டின் ஆசிரியர்களின் தகுதிக்கும் மேலாக உயர்ந்துவிட முடியாது என்பது பொன்மொழி. ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும் அதன் ஆசிரியர்களிடமே விடப்பட்டுள்ளது. ஆசிரியர் உயர அவர்தம் நோக்குயர, போக்குயர, வாக்குயர நாடே உயரும். எனவே ஆசிரியர்களைக் கல்வியால், பயிற்சியால், தகுதியால், திறனால், தொழிலறத்தால் உயர்த்தியே எந்நாடும் உயர முடியும்.

ஆசிரியரின் பணி பன்முகப் பரிமாணங்களை உடையது. எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் தலையாய பொறுப்பு ஆசிரியரிடமே உள்ளது. மாணவர்களுக்கு பாடப்பொருளைக் கற்பிப்பதோடு மாணவரின் உள்ளுணர்வை அறிதல் (understanding insight), ஆளுமையை வளர்த்தல், தகவல்களைச் சேகரித்தல், தொடர்பு படுத்திப் பார்த்தல், கற்றதைப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு திறமை களை வளர்த்தல் ஆசிரியரின் பொறுப்பாகும். மாணவர் தம் வாழ்வில் எதிர்கொள்ள நேரும் பிரச்சனைகளை ஆராய்ந்து, அலசிப் பார்த்து தீர்வு காண்பதற்கான திறமைகளை வளர்த்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

எனவே ஆசிரியர்கல்வி காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்தப்பட வேண்டும் அதற்கான நடைமுறைகளும் வழிப்படுத்தல்களும் அதற்குரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படவேண்டும் அப்போதுதான் வளம்மிக்க ஆசிரியர் குழாத்தை உருவாக்கி மாற்றமுறும் உலகின் சவால்களை முறியடிக்க முடியும்

## இசுறுபாய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையிலான குழுவினர் GEMP வேலைத்திட்ட செயற்பாடுகளைப் பார்வையிட்டனர்

இசுறுபாய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (பொறியியல்) கலாநிதி எஸ்.ரி.எஸ் காரியவசம் தலைமையிலான குழுவினர் கலாசாலையில் இடம்பெற்ற GEMP செயற்றிட்டத்தின் அடிப்படையிலான வேலைகளைப் பார்வை யிடுவதற்கும் கலாசாலையின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக திட்டமிடுவதற்கும் எனக் கலாசாலைக்கு 12.07.2024 வருகை தந்தனர்

இக்குழுவில் இசுறுபாய கல்வி அமைச்சின் பாடசாலை வேலைகள் பணிப்பாளர் பொறியிய லாளர் ரத்னமாலி மற்றும் பொறியியலா ளர்கள் கட்டடவினைஞர்கள் (Architect) எனப் பலரும் அடங்கியிருந்தனர்.

கலாசாலையில் 2.2 கோடி ரூபா பெறுமதியான புனரமைப்பு வேலைகள் இந்த ஆண்டு இடம்பெற்றிருந்தன இவ்வேலைகளைப் பார்வையிட்ட மேலதிக செயலாளர் திருப்தி தெரிவித்ததோடு கலாசாலை சுற்றுப்புறச் சூழல் தூய்மையாக பேணப்படுவது குறித்தும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.






# News in Brief - Month of July

**12.07.2024**

Addl. Secretary Ministry of Education Isurupaya Engineer Dr S.T.S. Kariyavasam, Director of School works Engineer Mrs Rathnamali and other engineers of MoE Isurupaya visited to Kopay Teachers' College and paid their attention to the building works which were done this year under the GEM project.

**24.07.2024**

The Adipirappu ceremony organized by Fine Arts Forum of Kopay Teachers' College was held in the morning on 24.07.2024 under the leadership of Principal S.Laleesan at Ratilashmi hall. The Director, Department of Northern Province Cultural Affairs Mrs. Lagini Niruparash was the chief guest and Valigamam East Regional Cultural Officer Mr P. Jayadas was the special guest.

Mrs. Maithili Gokulakannan, Teacher student of Primary Education, moderated these events.

The welcome speech was given by Guitta Thavarasa, teacher student of Science. Deputy Principal K. Senthilkumaran and Lecturer Vel Nandakumar delivered a speech. E. Senthurselvan Teacher student of Science gave a special speech on the Adipirappu.

## 30.07.2024

## The Retirement of the Service

Mrs Jayakumari Sriskandaraja Lecturer celebrated her sixtieth Birthday on ( Diamond Jubilee ) Kopay Teachers' College Teacher Educator Service was held on Tuesday 30.07.2024 organized by the Lecturers Guild under the leadership of College Principal Shandramoulesan Laleesan.

Former Principals Mr V.K.Kanapathip pillai, Mr V.Karunalingam, Senior Lecturer Mr V.S.Gunaseelan and Jaffna NCoE Lecturers were participate in the event.

In the event, Vice President of the Lecturers' Guild T. Thavasekhar gave the welcome address and Vice Principal Mrs Sathya Ranjit delivered the vote of thanks.

**31.07.2024**

**Wednesday Assembly** of Kopay Teachers' College was held. The Guest Speaker of the event Senior writer Nedunthivu Mahesh participated and He shared his experience on teaching mathematical concepts. In the concluding speech, the college principal delivered the concluding speech. In his speech he mention at every teacher would be a creator in their carrier.

# பணிநயந்து வாழ்த்துகிறோம்
## திருமதி எஸ்.ஜெயக்குமாரி (விரிவுரையாளர் SLTES )

விரிவுரையாளர் ஜெயக்குமாரியின் மணி விழா 30.07.2024 கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கல்வியாளர் சேவை (SLTES) விரிவுரையாளர் ஜெயக்குமாரி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் மணிவிழா 30.07.2024 செவ்வாய்க்கிழமை விரிவுரையாளர் கழகத்தின் ஏற்பாட்டில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

விழா நாயகியும் அவரது துணைவரும் கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து மங்கல வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை முன்னாள் அதிபர்களான வே. கா. கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம் மற்றும் முன்னாள் விரிவுரையாளர் வி எஸ். குணசீலன் பிரதி அதிபர் க.செந்தில்குமரன், ஓய்வு நிலை பிரதிக்கல்வி பணிப்பாளர் சி மாணிக்கராசா, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் சண். வாமதேவன், முன்னாள் ஆசிரிய மாணவர் வவுனியா இரவிக்குமார், தலைமை முகாமைத்துவ உத்தியோகத்தர் நிஷந்தி பிரதீபன் , ஜெயக்குமாரி அவர்களின் உறவினரான கமலாதேவி, கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் சுமதி உள்ளிட்ட பலர் ஆற்றினர்.

தொடர்ந்து பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டு விழா நாயகி கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் வரவேற்புரையை விரிவுரையாளர் கழக உப தலைவர் த.தவசேகரும் நன்றி உரையினை உப அதிபர் சத்யா ரஞ்சிற்றும் ஆற்றினர்.

நிறைவாக விழா நாயகியின் ஏற்புரையுடன் விழா சிறப்பாக நிறைவு பெற்றது.

மதிய விருந்துபசாரத்தைத் தொடர்ந்து விழா நாயகியும் அவரது குடும்பத்தினரும் கலாசாலை சமூகத்தினரால் சம்பிரதாய பூர்வமாக வீடு வரை அழைத்து சென்று விடப்பட்டனர்.







# 36 வருட கல்விச் சேவையை நிறைவுசெய்து அரச சேவையிலிருந்து விடைபெறுகிறார் ஜெயக்குமாரி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இலங்கை கல்வியாளர் சேவை விரிவுரையா ளராக சேவையாற்றி 29.07.2024 உடன் தனது அரச சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறுகிறார் **ஜெயக்குமாரி.**

புலோலி கிழக்கு பருத்தித்துறையில் முத்துக்குமாரு, தங்கேஸ்வரி தம்பதியரின் மகளாக பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ தட்டாதெரு மெ.மி.த.க பாசாலை யிலும், இடைநிலை க்கல்வி, உயர்நிலைக்கல்வி யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார். தொடர்ந்து ஆசிரியராகி யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 05.02.1991 – 31.12.1992 காலப்பகுதியில் ஆரம்பக்கல்வி பயிற்சி நெறியை தொடர்ந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து கலைமானிப்பட்டத்தையும் தொடர்ந்து தமிழில் முதுமானி பட்டத்தையும் முடித்தார். இவரது கல்விச் சேவை விபரம் வருமாறு

| | |
|---|---|
| பிறப்பு | - 30.07.1964 |
| பிறப்பிடம் | - புலோலி கிழக்கு பருத்தித்துறை |
| வசிப்பிடம் | - புலோலி கிழக்கு பருத்தித்துறை |
| தந்தையார் | - திரு. முத்துக்குமாரு |
| தாயார் | - திருமதி. தங்கேஸ்வரி |
| பிள்ளை | - சஞ்சிதகிருஷ்ணா (பேராதனைப் பல்கலைக்கழகம்) |
| **ஆரம்பக்கல்வி** | -யா/ தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை |
| **இடைநிலைக்கல்வி மற்றும் உயர்நிலைக்கல்வி** | - யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி |

## ஆசிரியர் சேவை

முதல் நியமனம் - 17.08.1988

யா/கற்கோவளம் மெதடிஸ் தமிழ்க் கலவன் பாசாலை
17.08.1988 - 04.02.1991

யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
05.02.1991 – 31.12.1992

யா/கற்கோவளம் மெதடிஸ் தமிழ்க் கலவன் பாடசாலை
01.01.1993 – 31.12.1993

யா/ குடத்தனை தமிழ்க்கலவன் பாடசாலை
01.01.1994 – 31.12.1997

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
01.01.1998 – 31.01.2005

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
01.02.2005 - 31.12.2005

யா/ வடமராட்சி மகளிர் மத்திய கல்லூரி
01.01.2006 - 07.01.2007

யா/கோண்டாவில் இராமக்கிருஷ்ண மகா வித்தியாலயம்
08.01.2007 – 14.01.2013

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இணைக்கப்பட்ட விரிவுரையாளர்
15.01.2013 – 14.12.2014

யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் (SLTES - III)
15.12.2014 – 29.07.2024

பழகுவதற்கு எளிமையானவராகவும், பார்வைக்கு இனிமையானவராகவும், எந்த வேளையிலும் உதவும் மனப்பாங்கு கொண்டவராகவும் திகழும் ஜெயக்குமாரி அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற கலாசாலையில் கோயில் கொண்டருளும் யோகாம்பிகை சமேத யோகலிங்கேஸ்வரனை பிரார்த்திக்கின்றோம்.

# மூத்த எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் அவர்களின் அதிதி உரை
## 31.07.2024 புதன் ஒன்றுகூடல் நிகழ்வாக இடம்பெற்றது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதன் ஒன்றுகூடல் கலாசாலை அதிபர் தலைமை யில் இடம் பெற்றது. இதில் மூத்த எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலந்து சிறப்பித்தார்.

திருமதி பாத்திமா றிஸ்ரி னா இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவியுடைய நெறிப்படுத்தலில் இடம் பெற்ற நிகழ்வு களில் கடவுள் வணக்கம் தமிழ்த்தெய்வ வணக்கம் ஆசிரியர் கீதம் என்பன இசை க்கப்பட்டன.

தொடர்ந்து முதலாம் வருட விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர் செல்வன் நெடுந்தீவு மகேஷ் எழுதிய தாரணி ஒரு ஆச்சரியக்குறி என்ற நூல் பற்றிய நயப்புரையை ஆற்றினார் . தொடர்ந்து எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் பற்றிய அறிமுகவுரையை கலாசாலை விரிவு ரையாளர் வேல் நந்தகுமார் மேற்கொண்டார்.. அதனை அடுத்து நெடுந்தீவு மகேஷ் கணித எண்ணக் கருக்களை கற்பித்தல் தொடர்பான அனுபவப் பகிர்வினை மேற்கொண்டார்.

அதனை அடியொற்றி தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தாரணி ஒரு ஆச்சரியக் குறி என்ற புத்தகத்தை எழுதியமை அபற்றியும் ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.

நிறைவுரையாற்றிய கலாசாலை அதிபர் ச.லலீசன் ஒரு எழுத்தாளனுக்கு அவசியமான விடயம் அனுபவங்களைச் சேகரித்தல் என்று குறிப்பிட்டதோடு ஆசிரியர்கள் ஆக்கத்திறன் மிக்கவர்களாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அதற்கேற்றாற்போல கவிதைகள் சிறுகதைகள் போன்றவற்றைப் படைப்பதற்கு முயற்சி செய்யுமாறும் ஆலோசனை கூறினார்.

எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.








# கற்பித்தல் பயிற்சியின் அனுபவப் பகிர்வு ~ 1



இ.செந்தூர்செல்வன்
ஆசிரிய மாணவன்
விஞ்ஞானநெறி (2023/2024)

முதலாம் வருட அணியினருக்கான கற்பித்தல் பயிற்சியில் முதலாம் மட்டம் 01.07.24 தொடக்கம் 19.07.24 வரை இடம் பெற்றது. தமக்கு என ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் தரவுகளுடனும் பாடவேலைத்திட்டம் செயற் பாட்டுத் திட்டம் என்பவற்றுடன் தயார் நிலையில் காணப்பட்டனர். ஆசிரிய மாணவர்களே எனினும் மேற்பார்வையாளர் களின் கண்காணிப்பு மதிப்பீடு நிகழும் என்பதால் அனைவர் மத்தியிலும் இனம் புரியாத நெருடல் எமது விஞ்ஞான கணித ஆசிரிய மாணவர் அணி கற்பித்தல் பயிற்சியை எதிர்கொள்ளும் துணிவினை வரவழைத்துக் கொண்டது என்றாலும் மனதில் பதட்டம் இல்லாமல் இல்லை.

நானும் விஞ்ஞான அணி ஆசிரிய மாணவன் என்பதால் எனக்கும் மேற்குறிப்பிட்ட உணர்வுகள் இல்லாமல் இல்லை யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி கற்பித்தல் பயிற்சிக்காக ஒதுக்கப் பட்டது. உடுவில் மகளிர் கல்லூரி பெண்கள் பாடசாலையில் கற்பித்த எனக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலை ஆண் பெண் மாணவர்களை கொண்ட பாடசாலைசாலை எப்படி இருக்கும் என்ற நினைவுகளுடன் நேரசூசி மற்றும் பாடங்களைப் பெற கல்லூரியில் நுழைந்தேன். அதிபருடன் அறிமுகம் சிறப்பாக இருந்தது மட்டுமின்றி தம்மால் இயன்ற ஒத்துழைப்புகளை நல்குவதாகவும் குறிப்பிட்டனர்.

கல்லூரிக்கு ஆசிரியர் பயிற்சிகான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட போதும் தனிமை மிகவும் வருத்தியது எனினும் எனது நண்பரும் கல்லூரியின் ஆங்கில ஆசிரியருமான திரு தயாபரன் இருந்தமை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. மாணவர்கள் சிறப்பான முறையில் ஒத்துழைப்பு நல்கினர். நான் எதிர்பார்த்ததை விட அவர்கள் சிறப்பான முறையில் தொழிற்பட்டனர்.

பாடசாலை ஆசிரியர்களும் மிகவும் ஒத்துழைப்புடன் நடந்து கொண்டனர்.

**அவதானிக்கப்பட்ட சிறப்பு அம்சங்களாவன**

தரம் 6,7 ஆண்டுகளுக்கு முழுமையான திறன் வகுப்பறைகள் காணப்படுகின்றன.

வகுப்பு ஆசிரியர்கள், பகுதி தலைவர்கள், உப அதிபர், பிரதி அதிபர் அதிபர் இன்னும் நிர்வாக படிமுறை ஒழுங்கு காணப்பட்டது.

கருத்தரங்குகள் பாட வேலைகளுக்கு கரைந்து விடுவது மிகப்பெரிய சங்கட சங்கட நிலைமை ஆகும்.

இருப்பினும் எனது கற்பித்தற் பயிற்சிக்காலம் சிறப்பாக அமைந்தது எனலாம்





# கற்பித்தல் பயிற்சியின் அனுபவப் பகிர்வு ~ II



செல்வி தி பெலினி
ஆசிரிய மாணவி
விஞ்ஞானநெறி
(2023/2024)

நான் கற்பித்தல் பயிற்சிக்காக தெரிவு செய்த பாடசாலை யா/ வட்டு இந்துக் கல்லூரி ஆகும். புகழ்பெற்ற சைவப் பெரியாரான அம்பலவானர் நாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை ஆகும். இன்று வலிகாமம் மேற்கில் சிறந்த ஒரு முன்மாதிரியான பாடசாலையாக இருக்கின்றது. இப்பாடசாலையின் கற்பித்தல் பயிற்சிக் காலத்தின் போது என்னால் அவதானிக்கப்பட்ட மேம்பட்ட விடயம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் கல்லூரியின் அதிபர் புன்முறுவலோடு ஆசிரியர்களை வரவேற்பது சிறந்த உள ரீதியான உறுதிப்பாட்டை தரும் செயல் ஆகும். மாணவர்கள் எதையாவது தேடி அறிய வேண்டும் என்ற தேடலோடு இருப்பது சிறப்பான பண்பாகும். இக் கல்லூரியில் திறன் பலகை பயன்பாடு உச்ச அளவில் காணப்படுகிறது. இதன் மூலம் செயற்பாட்டு முறையிலான கற்றல் கற்பித்தல் இலகுவாக்கப்படுகின்றது.

புதன் , வெள்ளிக்கிழமைகளில் சமயம் சார் புற விருத்தி செயற்பாடுகள் மாணவர்கள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு பேணப்பட்டு வருகிறது. மாணவர்க்கான கற்றல் விரிவு ஏற்படுத்த உடற்பயிற்சி நிகழ்வுகள் கிரமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆசிரியருக்கு இடையில் ஒற்றுமை உணர்வு பேணப்படுவதால் அகநிலை முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டு சிறப்பான ஆளிடைத் தொடர்பு பேணப்பட்டு வருகிறது.

பாடசாலை முடிவடையும் சந்தர்ப்பத்தில் மாணவர்த்தலைவர்கள் பாடசாலை ஒழுங்கை பொறுப்பேற்று திறம்பட நடாத்துவது பெருமைக்குரிய விடயம் ஆகும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இப்பாடசாலை மிகவும் சிறப்பாக விளங்கி வருகின்றது. நானும் விருப்புடன் எனது பணியையும் ஆற்றி வந்தேன் என்பதில் எந்த ஐயமும் இல்லை.





# ஆடிப்பிறப்பு விழாப் படத்தொகுப்பு

மு.கஜந்தன் (ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி 2023/2024)












# பணி நயப்பு விழாப் படத்தொகுப்பு

## மு.கஜந்தன் (ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி 2023/2024)
















## பணி நயப்பு விழாப் படத்தொகுப்பு









## கற்பித்தல் பயிற்சிப் படத்தொகுப்பு





